
வாய்மொழி வரலாறுகள்

05

# வெற்றியன் இராசரத்தினம்

# வாய்மொழி வரலாறு




சங்கானை நிச்சாமம்
சாதி எதிர்ப்புப்
போராட்டத்தின்
வரலாற்றுப்பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியன் இராசரத்தினம் வாய்மொழி வரலாறு

நேர்காணல்
க.பரணீதரன்

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி வரலாறுகள் வரிசை - 05

# வெற்றியன் இராசரத்தினம் வாய்மொழி வரலாறு


| | |
|---|---|
| நேர்காணல் | : க.பரணீதரன் |
| தொகுப்பும் பதிப்பும் | : தி.கோபிநாத், க.பரணீதரன் |
| உரிமம் | : CC BY-SA 4.0 (Creative Commons-Attribution-ShareAlike) |
| வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| வெளியீடு | : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் |
| அச்சகம் | : பரணி அச்சகம், நெல்லியடி. |
| பக்கங்கள் | : 52 |
| முதலாம் பதிப்பு | : 2024 கார்த்திகை |
| விலை | : 250/- |
| ISBN | : 978-624-6601-26-3 |

ஜீவநதி வெளியீடு - 395




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

ஜீவநதியின் 395 ஆவது வெளியீடாக ஜீவநதி தொடராக வெளியிட்டு வரும் "வாய்மொழி வரலாறுகள்" நூல் வரிசையின் நான்காவது நூலாக சங்கானை நிச்சாமம் கிராமத்தைச் சேர்ந்த வெற்றியன் இராசரத்தினம் அவர்களின் வாய்மொழி வரலாறு நூலுருப் பெறுகின்றது.

வெற்றியன் இராசரத்தினம் அவர்கள் நிச்சாமம் கிராமத்தில் பிறந்தது முதல் அங்கேயே வாழ்ந்து வருபவர். ஈழத்து சாதிய எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட முதன்மையான கிராமாக நிச்சாமம் கிராமம் விளங்குகின்றது.

ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான கொடுமைகளை உலகறியச் செய்ததில் நிச்சாமம் முன்னிற்கின்றது. நிச்சாம சாதிய எதிர்ப்பு போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவர்களில் ஒருவரான வெற்றியன் இராசரத்தினம் அவர்கள் குறித்த பிரச்சினைகளின் ஆரம்பம் முதல் தற்கால நிச்சாமம் பற்றி விரிவானதொரு வாய்மொழி வரலாற்றை கூறியுள்ளார்.

நிச்சாமத்து சாதியப் பிரச்சினைகளைப் பற்றி அறிந்து கொள்ள முனைகின்ற ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஓர் அடிப்படை விளக்கத்தை அளிக்கும் என நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப்பிரவேசப் பிரச்சினைகள், ஆலயத்தில் சுவாமி காவுவதில் பிரச்சினை, ஆலயத்தில் அன்னதானம் வழங்குவதில் பிரச்சினை, தேநீர் கடைப் பிரவேசங்கள், சலூன் பிரவேசங்கள் என பல்வேறு சாதியப் போராட்டங்கள் பற்றி இங்கு பேசப்பட்டுள்ளது. இந்தப் போராட்டங்கள் நிச்சாமத்து மக்களிடம் ஏற்படுத்திய பாதிப்புகள், உயிரிழப்புகள் பற்றி எல்லாம் இந்த வாய்மொழி வரலாறு வெளிப்படுத்தியுள்ளதுடன் இன்றும் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் சாதியப் பிரச்சினைகளையும் இனம் காட்டி நிற்கின்றது. இன்று நிச்சாமத்து ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியில் முன்னேறி, பொருளாதார வளத்தை பெருப்பித்து நல்லதொரு வாழ்வை வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த வாய்மொழி வரலாற்றை வழங்கிய வெற்றியன் இராசரத்தினம் அவர்களுக்கு எமது நன்றி

- க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியன் இராசரத்தினம் வாய்மொழி வரலாறு

இந்த வாய்மொழி வரலாற்று நேர்காணலானது நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் செயற்றிட்டம் மூலம் பதிவு செய்யப்பட்டதாகும். நூலக நிறுவனத்தில் பணி யாற்றிய கலாமணி பரணீதரனால் பதிவு செய்த இந்த நேர்காணல் இயல்பான ஓர் உரையாடலாகவே பதிவுசெய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

பரணீ:

வணக்கம் ஐயா. உங்களது பெயரைக்குறிப்பிட்டு உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள்... நீங்கள் அனுபவித்த அடக்கு முறைகள் பற்றியும் கூறுங்கள்...

வெற்றியன் இராசரத்தினம்:

வணக்கம். எனது பெயர் வெற்றியன் இராசரத்தினம். இப்பொழுது எனக்கு வயது 62. நான் 12.11.1958 அன்று பிறந்தேன். இப்பகுதியில் சாதியம் என்ற சொல்லால் அடக்கப்பட்ட மக்களாக ஆரம்ப காலம் முதல் இருந்து வருகிறார்கள். முதன் முதலில் அடக்குமுறை என்பது சுடலையிலேயே ஆரம்பமானது. அதாவது பிரான்பற்றில் உள்ள விளாவெளி என்ற சுடலை உள்ளது. அச்சுடலைக்கு அருகில் உள்ளவர்கள் பிரான்பற்று எண்ணெய் வியாபாரிகள். அவர்கள் எங்கள் சமூகத்தவரை அச்சுடலை மடத்தில் எரிப்பதற்கு அனுமதி தரமறுத்தார்கள். இது 1931இல் இடம் பெற்றிருந்தது. இதுவே சாதியப் பிரச்சினையின் ஆரம்ப மாக இருந்தது. தொடர்ச்சியாக இந்த மக்கள் சாதியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயரில் அடக்கப்பட்டார்கள்.

சாதாரண கூலி விவசாயிகளாகவும் சீவல் தொழில் செய்பவர்களாகவும் இப்பகுதி மக்கள் காணப்பட்டனர். இவர்கள் பொருளாதாரத்தில் பெரிதளவில் உயர்நிலையில் இருக்கவில்லை. இவர்களுக்கான உரிமைகள் சமூக ரீதியில் நசுக்கப் பட்டது. அதாவது பறையர், நளவர், வண்ணார், அம்பட்டர், பள்ளர் எனக் குறிக்கப்பட்ட சாதியினருக்கு உரிமைகள் மறுக்கப்பட்டது.

உதாரணத்திற்கு முதலில் சுடலை பிரச்சினையை குறிப்பிடலாம். இரண்டாவது சங்கானை செங்கல் படை மகாதேவப்பிள்ளையார் ஆலயம் நிறுவப் பட்டது. அதற்கு உரித்துடையவராக தொட்டிலடி யைச் சேர்ந்த விதானையார் செவ்வந்திநாகர் இருந்தார். அவரே இந்தக் கோயிலின் பாதுகாவலராகவும், ஆதிக்கத் தலைவராகவும் காணப்பட்டார். விதானையார் என்ற ரீதியில் சில தேவைகளை பொதுவாகவே மேற் கொண்டிருந்தார்.

இச்சுற்றுச்சூழலிலுள்ள மக்களையும் கருத்தில் கொண்டே இவ்ஆலயத்தை வழி நடத்தினார். ஆரம்ப காலத்தில் பத்துத் திருவிழாவைச் செய்தபோது ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு திருவிழா வழங்கப் பட்டது. பிரான்பற்று, தொட்டிலடி, சங்கானை (கோவியர்), தச்சர் என ஒவ்வொரு சமூகத்தையும் இணைத்திருந்தாலும் எமது சமூகத்திற்கு திருவிழா மறுக்கப்பட்டிருந்தது.

எங்களுடையது இரண்டாம் திருவிழா. செவ்வந்திநாதரிடம் திருவிழாவிற்கான சமான்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி ஒப்படைத்தால் அவற்றைப் பெற்று கொண்டு பூசைகளை செய்வித்தனர்.

எங்களுடைய திருவிழாவிலும் வழிபாடு களிலெல்லாம் அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப் பட்டது.

எமது சமூகத்தினர் கோயிலுக்குள்ளும் செல்ல முடியாது.

தங்களுடைய தேவைகளை எம்மைப் பயன் படுத்தி நிறைவேற்றியிருந்தார்கள்.

பிரசாதங்களை மட்டும் வெளியில் கொடுத்து விடுவார்களே தவிர அவர்களும் அதனை உண்ண மாட்டார்கள்.

அதன் பின்னர் 1958ம் ஆண்டு சின்னப்பு 2ம் திருவிழாக்கு பொறுப்பாக இருந்தார். சின்னப்பு (பள்ளர் சமூகம்) அவர்களுடைய குடும்பம் சகோதரர்கள் இணைந்து கோயிலுக்குள் வந்து வழிபாட்டில் ஈடுபடப் போவதாக சிறிய பிரச்சினை ஒன்றை ஏற்படுத்தி னார்கள். இப்பிரச்சினைக்கு நிச்சாமம் கிராமத்திலுள்ள அன்றைய இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் ஒன்றி ணைந்து ஆலயப்பிரவேசத்திற்காக போராடினார்கள். கோயிலுக்கான பாதுகாவலர் செல்வந்திநாகர் பொலிஸில் முறைப்பாடு செய்து, பின்னர் கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதவான் விசாரணையின் போது "கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது எனக் கூறப்படுவதற்கு காரணம் என்ன" எனக் கேட்டார். அதற்கு அவர் "தீண்டத்தகாத சாதியினர் என்பதால் இவர்களைக் கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது" எனக் கூறினார். அதற்கு நீதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தீண்டத்தகாதவர்கள் என்றால் யார்? எதற்காக தீண்டத்தகாதவர்களுக்கு திருவிழாவை எழுதிக் கொடுத்தீர்கள்? தீண்டத்தகாதவர்கள் என்றால் அவர்களும் மானுடப் பிறவியினர் தானே” என்று கேட்டு இவர்களையும் உடனடியாக கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கினார்.

1958ம் ஆண்டு பிரச்சினையுடன் கோயில் திறக்கப்பட்டது. அதுவரையும் கோயில் பூட்டப் பட்டிருந்தது. இருப்பினும் சிறிய பிரச்சினை காணப் பட்டது. அதாவது கோயிலுக்குள் வந்தாலும் பூசைக் கான அனைத்து ஏற்பாடுகளும் கோயில் நிர்வாகத்தி னரிடமே காணப்பட்டது. ஆரம்பத்தில் சின்னப்பு குடும்பத்திற்கு என இருந்த 2ம் திருவிழா பின்னர் நிச்சாமம் கிராமத்துக்கு என பொதுவாக்கப்பட்டது. 1958 பிரச்சினைக்கு பின்னர் இத்திருவிழாவில் சகல மக்களுக்கும் உரிமை ஏற்பட்டதுடன் அவர்களின் நிதிப் பங்களிப்பிலேயே இடம்பெற்றது. அத்துடன் கோயிலினுடைய எந்தப் பொருட்களிலும் அதாவது சங்கு, காவுகம்பு, மணி என எதிலும் இவர்கள் தொட முடியாது. சுவாமியைத் தூக்க முடியாத நிலையும் இருந்தது.

கோயிலுக்கான செலவு, காசு, பொருட்கள் படிச்சம்பளம் என்பவற்றை திருவிழாக்காரர் கொடுத்தால் அவர்களே ஒழுங்கை செய்து பூசையை முடிப்பார்கள். செவ்வந்தி நாதரோ அல்லது அவரது மருமகன், அல்லது உறவினர்கள் காளாஞ்சியைப் பெறுவார்கள். பிரசாதம் எம்மவர்களிடம் வழங்கப்படும். அங்கு தச்சர், கோவியர், வெள்ளாளர், அம்பட்டர் போன்ற வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியினர் கூட கோயிலுக்கு வருவார்கள். ஆனால் பிரான்பற்றைச் சேர்ந்தவர்கள் (சாண்டார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், எண்ணெய் வாணிபம் செய்பவர்கள்) இக்கோயிலுடன் ஏற்பட்ட ஒரு பிரச்சினையிலிருந்து இக்கோயிலிருந்து விலகினார்கள். ஆனால் இன்று சமூகத்தில் உயர் நிலையில் காணப்படுவதுடன், பல கோயில்களையும் நடத்துகிறார்கள்.

நிச்சாமத்து பள்ளர் சுவாமியைத் தூக்க முடியாது. ஏனைய சாதியினரும் சுவாமியைத் தூக்க முடியாது. சுவாமி தூக்குவதற்கு என தொண்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான சம்பளம் எங்களுடைய காசிலிருந்தே வழங்கப்பட்டது. ஏனைய சாதியினர் தமது 4ம் 5ம் திருவிழாக்களுக்கு சாமியைத் தொட்டு வணங்கிச் செல்வார்கள். ஆனால் நாங்கள் தான் தொட முடியாது.

நிச்சாமம் ஞானவைரவர் ஆலயம் எங்களுடைய சமூகத்துக்கென உருவாக்கப்பட்ட ஒரு ஆலயம் ஆகும். இவ் ஆலய நிர்வாக அமைப்பே 2ம் திருவிழாக்கு பொறுப்பாக இருந்தது. பிரச்சினை ஏதாவது ஏற்பட்டா லும் அதனை நிர்வாகமே பொறுப்பெடுக்க வேண்டும். திருவிழா தொடர்பாக நிர்வாகத்திற்கு அறிவித்தால் நிர்வாகம் நோட்டீஸ் மூலம் ஊர் மக்களுக்கு அறிவித்து நிதி சேகரித்து பிள்ளையார் கோயிலுக்கு வழங்கும். எவ்வளவு நிதி கொடுத்தாலும், கோயிலுக்குள் போக முடிந்தாலும் கோயிலுக்குள் வேறு எந்தவித தொண்டை யும் செய்ய முடியாத நிலை நிச்சாமம் கிராமத்து மக்களுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக இளைஞர் மட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக சில பிரச்சினைகள் ஏற்பட்டது. 1986ம் ஆண்டு நான், துரைசிங்கம், ஜெகநாதன் மாஸ்டர் ஞான வைரவர் நிர்வாகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டோம்.

அந்த வருடம் பெரும் கடுமையான கருத்துக் களை இங்குள்ளவர்கள் தெரிவித்தார்கள். "செவ்வந்தி நாதர் விதானையாருடன் கதைக்க முடியாது", "அவர்கள் படித்தவர்கள்", "அவர் விதானையார்", "அவர்கள் அந்தஸ்துள்ளவர்கள்" என எங்களுக்கு கிராமத்தவர்கள் கூறினார்கள். நாங்கள் அவர்களுடன் கதைத்து அதற் கான தீர்வைப் பெறப்போகின்றோமே தவிர சண்டைக்கு போகவில்லையே. எங்களால் முடியும் வரை கதைப்போம்" என நாங்கள் கூறினோம். இக்கிராமத்து மக்களிடம் கூட எங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை வர வில்லை.

பிரச்சினைக்கு முகம் கொடுக்க முற்படுகையில் அதற்கான தீர்வை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்ற தெளிவும் எம் சமூகத்தவர்களுக்கு இல்லை.

எங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாது சுவாமியை தொட்டு வணங்கி, எங்களுக்கான உரிமை யைப் பெறுவதே எங்களுடைய நோக்கமாக இருந்தது.

1986ம் ஆண்டு நிர்வாகத்தில் நான் (பொருளாளர்), துரைசிங்கம் (தலைவர்), ஜெகநாதன் மாஸ்டர்(செயலாளர்) உட்பட 10 நிர்வாக உறுப்பினர் கள் இருந்தோம். இந்த ஊரில் எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுப்பதிலும், பிரச்சினைகளைத் தட்டிக் கேட்பதிலும் முன்னணி வகிப்பது எமது வழக்கம். தவறான விடயங்களுக்கு ஒருநாளும் இசைந்து போகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. இவ்வளவிற்கும் கஸ்ரப்பட்டே எமது உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். ஞானவைரவர் கோயிலில் அலங்காரத் திருவிழா ஒரு திருவிழாவாகவே நடக்கும். நாங்கள் பிள்ளையார் கோயில் நிர்வாகக் கூட்டத்தில் இப்பிரச்சினை தொடர்பாக கதைப்பதற் கான கடிதமொன்றை அவர்களுக்கு எழுதியிருந்தோம். செவ்வந்தி விதானையாரின் தம்பி Press வைத்திருந்தார். விதானையார் தம்பியின் மனைவி வெளிநாட்டில் இருந் தார்.

தற்போது விதானையாரும் அவரது தம்பியும் அமரத்துவமாகிவிட்டார்கள்.

எங்களுடைய திருவிழா மட்டுமே பொதுவான ஊருக்கான திருவிழா. ஏனையவர்களின் திருவிழா தனிக்குடும்பத்துக்காக வழங்கப்பட்டது. சங்கானை குணம், அப்பாவர், செல்லையா (தச்சர்), தொட்டிலடி சிவதட்சணாமூர்த்தி, தொட்டிலடி அப்பிராசனர், நாக ராசாவின் மருமகன் என எல்லோரும் தனிக் குடும்பத்தவர். இவர்களுக்கு இது குடும்பத்தின் திருவிழாவாக அமையும். நாங்கள் மட்டுமே ஒட்டு மொத்த கிராம மக்களாக 2ம் திருவிழாவைச் செய்பவர் கள். கடிதங்களைக் கொடுத்த பின் கூட்டத்திற்கு நிர்வாகத்தின் சார்பில் மூன்று பேர் சென்றோம். "விதானையார் இருக்கிற காலத்தில இப்பிரச்சினையை விட்டுவிட்டு அவர் இல்லாத காலத்தில் இது பற்றிக் கதைப்போம்" என விதானையாரின் தம்பியார் சொன்னார் என சிவதட்சணாமூர்த்தி கூட்டத்தில் சொன்னார். பின்னர் நாங்கள் விதானையாரின் தம்பி யாருடன் கதைக்க விரும்பியதை அவருக்கு தெரிவித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோம். கூட்டம் நிறைவு பெற்று வீட்டிற்கு வந்தால் கிராமத்தவர்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். "அவர்கள் விதானை குடும்பம்", "வெள்ளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்", "விதானையின் தம்பியார் பெரும் Press வைத்திருக்கிறார்" என கருத்துக்களை தெரிவித்தார்.

எங்களுடைய சமூகத்தவர் அவர்களைக் கண்டவுடன் தமது சால்வையைக் கழட்டி கமக்கட்டிற்குள் வைத்தே கதைத்தார்கள். இன்றும் அவர்களைக் கண்டு விட்டு தலைகுனிபவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஏன் இதற்குத் தலைவணங்க வேண்டும், அவர்கள் வீட்டுக் காசில் நாங்கள் சாப்பிடுவதில்லையே, மனிதநேயம் என்பது முக்கியம், மனிதர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், ஒரு மனிதர் என்னை மதித்தால் பதிலிற்கு நான் உங்களை மதிக்க வேண்டும் ஆனால் எதற்காக தலைகுனிந்து நிற்க வேண்டும்? என்பது எனது கருத்து.

ஒரு கிழமையின் பின்னர் ஒரு ஞாயிற்றுக் கிழமை நானும் தலைவருமே சென்றிருந்தோம். ஜெகநாதன் மாஸ்டர் கூச்ச சுபாவம் உடையவர். அவர் வரவில்லை. அனுபவ ரீதியாக சில சம்பவங்களை விளக்கக் கூடிய தன்மை அவருக்கு இல்லை. நாங்கள் இரண்டு பேரும் சென்றிருந்தோம்.

தலைவர் சங்கக் கடையில் Salesman ஆக இருந்தார். அவர் தனது தொழிலை இடைநேரத்தில் விட்டுவிட்டு எங்களுக்காக வந்திருந்தார். நான் ஒருவரின் தோட்டத்தில் பகுதிக்கு தோட்டம் செய்தேன். 50 ரூபாவிற்கு விற்றால் எனக்கு 10 ரூபாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். கூட்டத்திற்கு சென்றபோது விதானையாரின் தம்பியார் மற்றும் கோயில் திருவிழாக்கார உபயகாரர்களும் மௌனமாக இருந்தனர்.

காரணம் எங்களை வைத்தே அவர்களுக்கு தீர்மானம் வழங்கப்பட இருப்பதால் அவர்களும் மௌனித்திருந்தனர். அத்தோடு பல நடைமுறைகள் இக்கோயிலில் இருந்தது. அதாவது எங்களுடைய திருவிழா நிறைவுற்றால் ஏனைய உபயகாரர்களின் திருவிழா பெரும் விமர்சையாக நடைபெறும். அவர்களுக்கு எவ்வித சட்டமும் இருக்காது.

ஆனால் எங்களுக்கு கோயில் திருவிழா 9 மணிக்கு நிறைவுற வேண்டும் என்றால் 8.50ற்கு மணி அடித்து சுவாமி இருப்புக்கு வந்தவுடன் கோயில் பூட்டப்படும்.

ஆனால் அவர்களின் திருவிழாவிற்கு 12 மணி வரையும் திருவிழா நடைபெறும் இல்லாவிடில் விடிய விடியவும் திருவிழா நடைபெறுவதாக இருக்கும். இதுவே எங்களுக்கு பிரச்சினையாக இருந்தது.

விதானையாரின் தம்பியார் வந்து கதைத்தார். "யார், சாமி தூக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வந்தது? அவ்வாறு எல்லாம் செய்ய முடியாது. விதானையார் இருக்கும் வரை இந்நிலையே நடைமுறையில் இருக்கும்" என்றார். அதன்பின்னர் "எனக்கு பல பேரைத் தெரியும். பல இயக்கங்களுக்கு காசு கொடுத்திருக்கிறேன், பல இயக்கங்களை எனக்குத் தெரியும். நான் சென்னால் எத்தனையோ பேர் இக் கோயிலுக்கு வருவார்கள்" என்றார்.

நாங்கள் இருவரும் அமைதியாக இருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதட்சணாமூர்த்தியுடன் எனக்கு பழக்கம் அதிகம். அவரும் "ஐயா குறிப்பிடுவது போல விதானையார் இருக்கும் வரை இதனையே கடைப் பிடிப்போம் அதற்குப் பிற்பாடு நல்ல தீர்வுக்கு வருவோம்" எனக் கூறினார்.

"ஐயா கதைத்து முடித்துப் போட்டாரா" என நான் கேட்டேன்.

"இதில் நீர் என்ன கதைப்பது, இது தான் முடிவு. நாங்கள் சொல்லும் விடயங்களையே இக்கோயிலில் நடைமுறைப்படுத்த வேண்டும். நீங்கள் திருவிழா செய்வதற்கான படிச் சம்பளத்தைத் தரலாம் கோயிலுக்குள் வந்து போகலாம் வேறு ஒரு உரிமையும் உங்களுக்கு தர முடியாது" என்றார்.

"எங்களுடைய மக்களிடம் நிதி சேர்த்து தர நீங்கள் திருவிழாச் செய்து பிரசாதத்தை மட்டும் தருவதை விட அவ்வளவு காசையும் சேர்த்து எமக்காக அமைக்கப்பட்ட ஞான வைரவர் கோயிலில் ஒரு திருவிழாவைச் செய்வதை விட அதனைப் பத்து ஆக்கி அதனைப் பயன்படுத்தலாமே" என்றேன்.

அதற்கு அவர் "இல்லை அவ்வாறு உங்களுக்கு திருவிழா தர முடியாது" என்றார். அவர் எங்களிடம் திருவிழா இல்லை என்றும் சொல்ல முடியாது. காரணம் திருவிழா இல்லாமல் ஆக்கப்பட்டால் பிள்ளையார் கோயில் அதில் நிலைத்திருக்க வாய்ப்பில்லை என்பதும் அவருக்கு தெரியும்.

அதனை நாங்கள் ஏற்கனவே சொல்லியிருந் தோம். மறுத்தால் சங்கானைப் பிள்ளையாரை தொட்டி லடியிலேயே வைத்திருக்க வேண்டும் சங்கானையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்க முடியாது என்றும் கூறியிருந்தோம்.

இக் காலம் 16 அல்ல 17 இயக்கங்கள் இருந்த காலம். விதானையின் தம்பி "Press வைத்திருந்ததால் இயக்கங்களுக்கெல்லாம் நோட்டீஸ் அடித்துக் கொடுத்திருக்கிறோம்" எனவும் கூறினார்.

அதற்கு நாங்கள் "நீங்கள் வசதியானவர்கள், படித்தவர்கள், ஆனால் நாங்கள் சாதாரணமானவர்கள் தான். ஆனால் நாங்கள் செய்யும் திருவிழாக்கு எமது மக்கள் காசு கொடுத்து பங்களிக்கிறார்கள். நாங்கள் பொறுப்பாக இருக்கும் நிர்வாக சபையில் மக்கள் இப் பிரச்சினையை முன்வைத்து தீர்த்து வைக்க வேண்டும். இல்லாவிடில் நாங்கள் நிர்வாக சபையில் இருந்து வெளியேற வேண்டும். நாங்கள் நிர்வாக சபை என்ற உரிமையுடனே இங்கு இதனைக் கதைக்கின்றோமே தவிர எங்களுக்கும் உங்களுக்கும் எவ்விதமான பிரச்சினையும் இல்லை என்றேன். தற்போது நிர்வாக சபையில் நாங்கள் இருப்பதால் எங்களுடைய மக்களால் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் நிபந்தனைகளை செயற்படுத்தாவிட்டால் அதற்கான விபரீதங்களை நீங்கள் சந்திக்க வேண்டும்" எனக் கூறினோம்.

"நீங்கள் காசு வழங்கிய இயக்கங்களில் எங்களுடைய சமூகத்தைச் சேர்ந்த எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீங்கள் காசு கொடுத்து அவர்களை கூப்பிடுவதை நாங்கள் காசு கொடுக்காது கூப்பிடு வோம்" என்றேன். இவ்வாறு கூறியதன் பின்னர் தாங்கள் இப்பிரச்சினை தொடர்பாக யோசித்து விட்டு இதற்கு பதில் தருவதாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அடுத்த கூட்டத்திற்கு வந்தபோது "நீங்கள் என்ன பிரச்சினை தொடர்பாக கேட்கிறீர்கள்" எனக் கேட்டார். "சுவாமியைக் காவ வேண்டும், எங்களுக்கென ஒதுக்கப் பட்ட 2ம் திருவிழாவை சகல பூசை நடவடிக்கைகளையும் நாங்கள் செய்ய வேண்டும். ஆலயச் செலவிற்கான பணத்தினை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். எங்களுடைய திருவிழா தவிர்ந்த ஏனைய திருவிழாக்களில் சாமி காவுதல், திருவிழா செயற்பாடு களில் பங்கெடுத்தல் என எந்த வித இடையூறும் செய்ய மாட்டோம்" என எங்களுடைய கருத்தை தெரி வித்தோம்.

அதற்கு "சாமி காவுதல் என்பது அனைத்துச் சாதியினருக்குமே பிரச்சினை தான். நாங்கள் சாமி காவுவதற்கென 4 தொண்டர்களை நியமித்து இருக் கின்றோம்" என்றார். "எதற்காக சாமி காவுவதற்கு தொண்டர்களுக்கெல்லாம் காசு கொடுக்கின்றீர்கள்". எங்களுக்காக ஏன் ஏனையவர்களை ஒதுக்குகிறீர்கள். நாங்கள் தான் நீங்கள் சொல்வது போல தீண்டத்தகா தவர்கள் என்றால் மற்றவர்கள் அவ்வா றில்லை தானே. நாங்களும் மனிதர்களே! நாங்கள் என்ன சுத்த மில்லாமலா கோயிலுக்குள் வருகின்றோம். எங்களை மதிக்காவிட்டாலும் அவர்களையாவது அனுமதிக்க லாமே?" எனக் கேட்டேன்.

மற்றைய சாதிக்காரர்கள் பெரும் அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒருவரும் தமக்காக கதைக்கவும் முன்வரவில்லை. கடைசியாக ஒரு வசனத்தை சொன்னார். அதாவது "அண்ணைக்கு ஏலாது. இறந்தால் அடுத்த வருடத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோம்." என்றார். அதற்கு நான் "அவர் இருக்கும்போதே அதனைச் செய்ய வேண்டும். அவர் சாதாரண மனிதர் அல்ல. மிக நல்ல மனிதர். இந்தக் கிராமத்துக்கு விதானையாராக இருந்து இச் சமூகத்திற்கு ஒரு பாடசாலை கட்டிக் கொடுக்க வேண்டும் என முயற்சித்து வெற்றி கண்டவர். அப்பள்ளிக்கூடமே விக்கினேஸ்வரா வித்தியாசாலை எனப் பெயரிடப் பட்டது. இவ்விதானையாரே எங்களுடைய சமூகத்திற் கென உருவாக்கி அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொடுத்தார். 1954இல் கட்டப்பட்டு இன்றும் இயங்கு கின்றது. அந்தவகையில் அவருடைய பண்புகள் தவறானதா என்றால் இல்லை" என கூறினேன். இப்பிரச்சினைக்கு இடையில் நிற்பவர்களே இதனைக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். இதற்கு பின்னர் திரும்ப வும் யோசித்து விட்டு சொல்வதாக பதிலளித்தார். அடுத்தது 8வது கூட்டத்தில் "நிர்வாகத்தினர் என்ற ரீதியில் எங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்திருந் தோம். நீங்கள் ஏதாவொரு வகையில் காய்நகர்த்த முற் படுகிறீர்கள். சாதாரண நிலையிலாவது எங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்க வேண்டும்" என்றேன். "நீங்கள் சாமியை தூக்க முடியாது. சாமி காவுதல் என்ற பிரச்சினை அனைவருக்கும் பொதுவானது என்பதால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது" என்றார்..

இதற்கு நான் கேட்டேன் "சங்கு, மணி, காவாங்கு அவற்றைத் தொடுவதிலாவது எங்களை அனுமதிக்க கூடாதா" என்று கேட்டேன். அதற்கு "இல்லை அதற்கு உங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோவொரு வகையில் எமது உரிமைக்கான அனுமதி யில் சிறிதளவு கிடைத்தது. "நிர்வாகம் என்ற ரீதியில் சமூகத்திற்காக உங்களிடம் இதனைக் கேட்டிருந்தோம். எங்களுக்கும் உங்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நீங்கள் சொன்ன விடயத்தினை எங்களுடைய நிர்வாகத்தின் மூலமாக எங்களுடைய சமூகத்திற்கு சொல்கிறோம். சமூகம் அதனை ஏற்றுக் கொண்டு செயற்பட்டால் அதில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஏற்றுக் கொள்ளாது ஏதாவது பிரச்சினை ஏற்படுத்தினால் அதற்கு நீங்களே பொறுப்பு" எனக் கூறினேன்.

அவர் யோசித்தார். அனைத்து மக்களும் ஒரு மனநிலையில் இருப்பார்கள் என்று இல்லை. நியாயத் தினை எடுத்துக் கூறினால் ஒரு மனநிலையில் ஏற்றுக் கொள்வார்கள். இல்லாவிடில் அவர்கள் கொதிப் படையலாம் என்றதாலே அவ்வாறு கூறியிருந்தேன். பின்னர் மறுநாள் எங்களுடைய திருவிழா. திருவிழா ஒழுங்குகளை மேற்கொண்டு விட்டு இன்னொருவரை பொறுப்புக்கு விட்டுவிட்டு நாங்கள் நிதி சேர்ப்பதற்காக நானும் தலைவரும் ஊரிற்குள் சென்றிருந்தோம். ஆனால் கோயில் பொருட்களை எங்களுடைய சமூகத்தவரும் தொடலாம் என்பதை அறிந்தும் கோயில் திருவிழாவில் எங்களுடைய சமூகத்தவர் எவரும் முன்வந்து தொண்டு களைச் செய்யாததால் உயர் சாதியினரே வழமை போல் செயற்படுவதாக இன்னொருவர் மூலம் அறிந்தோம். தலைவரும் நானும் உடனே கோயிலுக்குள் சென்றோம். கோயிலில் சென்றவுடன் வாசலில் நின்று தலைவர் துரைசிங்கம் உரத்த குரலில் கடுமையாக பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் நின்றிருந்த எல்லோரும் திகைத்தனர். விதானையாரின் தம்பி உடனே ஓடி வந்து " தம்பி என்ன பிரச்சினை" என்று கேட்டார். "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சொல்வது ஒன்று செய்வது ஒன்று" எனக் கேட்டார். அதற்கு விதானையாரின் தம்பி "நீங்கள் ஒருவரும் இல்லை அதனாலேயே நாங்கள் செய் கின்றோம்" என்றார்.

நாங்கள் திருவிழாவுக்கு பொறுப்பாக விட்டு விட்டு வந்த நபரும் அதனைக் கவனிக்கவில்லை. இச்சம்பவத்தைத் தொடர்ந்து உடனே எங்களுடன் வந்த ஒருவர் குடையை வாங்கி சுவாமிக்கு பிடித்தார். மற்றவர்களும் தாழ்வு மனப்பான்மையற்று திரு விழாவில் தொண்டுகளில் பங்களித்தனர்.

பின்னர் சாமி உள்வீதி சுற்றிய பின்னர் வெளி வீதிக்கு காவாங்கில் கட்டி சகடையில் வைத்தே வெளி உலா இடம் பெறும். தீண்டத்தகாதவர்களுக்காகவே அவ்வாறு நடைபெற்றது.

வசந்த மண்டபத்தில் வைத்து சுவாமியை காவாங்கில் கட்டிய பின்னர் விதானையாரின் தம்பி எந்தப்பிரச்சினையும் இல்லாது காவாங்கில் சுவாமியைக் காவும்படி சொன்னார். ஆனால் உள்வீதி மட்டும் பிள்ளைத் தண்டில் காவ வேண்டும். வெளிவீதி எல்லோரும் சுவாமியைத் தூக்க முடியும் என்றார். உள்வீதி காவுவதில் மட்டும் தற்பொழுதும் பிரச்சினை இருக்கிறது இதிலும் உரிமையைக் கேட்பது என்பது பிழை என்றாலும் அதுவும் ஒரு சாதாரண விடயம் தானே. கோயிலில் தொண்டு செய்பவர் தன்னுடைய ஆசைக்கு பிள்ளைத் தண்டில் சிறிய தடியைப் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலாம் அல்லவா? நாங்கள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பொழுது ஒரு வருடம் தான் நிர்வாகத்தை நடத்துவோம் என்று கூறி நிர்வாகத்தை நடத்தி எல்லாவற்றையும் மீண்டும் ஒப்படைத்தோம். ஆனால் நிர்வாகத்திடம் காசு இல்லாததால் இன்று வரை நட்டத்திலேயே செல்கின்றது. சமூகத்தின் தேவை என்ன?, சமூகத்திற்கு என்ன செய்கின்றோம்? என்ற ஒழுங்கமைப்பு இன்றைய நிர்வாகத்திடம் இல்லை. இன்று எல்லாம் மாற்றமடைந்துள்ளது. தன் தன் தேவைகளுக்காக அரசியல்வாதிகளுக்குப் பின்னால் செல்கிறார்கள். இவ்வாறு அரசியல் வாதிகளுக்குப் பின்னால் சென்றாலும் சமூகத்திற்கு ஆதரவாக சேவை செய்யலாம். அதுவுமில்லாது அரசியல்வாதிகளுக்கு விழா எடுத்து சண்டைகள் சச்சரவுகளை ஏற்படுத்தி சமூகத்தைச் சீரழிக்கிறார்கள். ஒரு காலத்தில் மிக கட்டுப்பாடான கிராமமாக எமது கிராமம் இருந்தது. கார் இரும்பு தான் எங்களுக்கு அக்காலத்தில் மணி. அந்த மணியைக் கையில் கொண்டு அடித்தால் முழு மக்களும் வாசிகசாலையில் ஒன்று கூடி பிரச்சினைகளை கதைத்து தீர்ப்பார்கள்.

1966ம் ஆண்டு தேநீர்க்கடைப் பிரச்சினை இடம் பெற்றது.

எங்களுடைய மக்கள் பொருட்களை சங்கானைச் சந்தைக்கே கொண்டு செல்வார்கள். இங்கு தரகர் தொல்லையும் அதிகமாக இருந்தது.

சங்கானைச் சந்தை கோவிய சமூகத்தவரின் ஆட்சியாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் தேநீர்க் கடையில் தேநீர் குடிக்க அனுமதிக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். அதாவது தேநீர்க்கடையில் கிடுகு வேலி போட்டு வேயப்பட்டிருக்கும். அக் கிடுகு வேலியில் தகர மூக்குப்பேணியும், ஜாம் போத்தலும் கொழுவப் பட்டிருக்கும். தேநீர் போடுபவருக்கு முதலாளி தேநீர் போடும் படி கட்டளையிட்டால் தேநீர் போடுபவர் "உள்ளுக்கா" அல்லது "வெளியிலா" என்று கேட்பார். உள்ளுக்கு என்றால் பித்தளை மூக்கும் பேணியில் தேநீர் தயாரித்து வழங்கப்படும். வெளியில் என்று முதலாளி சொன்னால் தேநீரைத் தயாரித்து வெளியில் கொழுவப் பட்டிருக்கும் தகர மூக்குப் பேணியில் ஒரு சாதிக்கும் பள்ளர், நளவர், அம்பட்டர், பறையர் போன்றோருக்கு ஜாம் போத்தலிலும் வழங்கப்படும். இவர்கள் வெளியில் இருந்து குடித்து விட்டு வெளியிலேயே கொழுவி விட்டுச் செல்ல வேண்டும்.

இவ்வாறான நடைமுறை இருந்ததுடன் தரகு தொல்லையும் கோவியரிடம் காணப்பட்டது. அதே சாதியினரால் ஆடி அமாவசைக்காக கீரிமலைக்குச் சென்றிருந்த போது அங்கு பிரச்சினை ஏற்பட்டிருந்தது. கீரிமலையில் வசிக்கும் கோவியர்களால் (வியாளி என்று கூறப்படும் சமூகத்தவர்களால்) தேநீர்க்கடையில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் இதனை சமாளித்துக் கொண்டு கீரிமலையில் இருந்து வந்து நேரடியாக சங்கானையில் (தற்பொழுது றஞ்சன் ஸ்ரோர்ஸ் என்ற இடத்தில்) அமைந்திருந்த தேநீர் கடையின் உட்சென்று தேநீர் போடச் சொல்லிக் கேட்டார்கள். இக்கடையும் கோவியர்களுக்கே சொந்தமாயிருந்தது. அவர்களுக்கு இவர்கள் எந்தச் சமூகத்தவர் என்பது தெரியும் என்பதால் அதில் பிரச்சினை ஏற்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் எமது சமூகத்தவரால் தேநீர்க் கடை அடித்து நொருக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோவியர்கள் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர். பின்னேரம் 4.30 மணியளவில் சங்கானை பொலிஸில் இன்ஸ்பெக்டராக இருந்த சாள்ஸ் தாமோதரம்பிள்ளை இவர்களைத் தேடி வந்தார்.

சின்னட்டி வீரசிங்கம் என்பவரது வீட்டிற்கு முன்னால் மாரிமுத்து மகேசி என்பவரின் வீடு அமைந்திருந்தது.

மண்வீடுகளில் தான் வசித்திருந்தார்கள். சின்னட்டி வீரசிங்கத்தை பொலி ஸார் பிடித்த போது, மகேசி உடனே அவர் வீட்டில் புகுந்து இரண்டு பொலிஸ்காரரையும் துப்பாக்கிகளைப் பிடித்தபடி காலால் எட்டி உதைந்தார். சின்னட்டி வீரசிங்கம் தப்பி ஓடினார்.

மக்கள் எல்லாரும் தடிகள், பொல்லுகளுடன் ஒன்று கூடியதைத் தொடர்ந்து பொலிஸார் செய்வதறியாது முழங்காலில் இருந்து கொண்டு நிலத்தை நோக்கிச் சுட்டார்கள். இதில் 2 அல்லது 3 பெண்கள் காயப்பட்டனர். இதனை தொடர்ந்து வெளியேறிய பொலிஸ் சிறிது நாட்களின் பின்னர் மீண்டும் சின்னட்டி வீரசிங்கம் கைது செய்தது.

இதன் போது மக்கள் எல்லோரும் மண்ணை ஒதுக்கி அதில் பெற்றோலை ஊத்தி கொழுத்த ஆயத்தமானார்கள். இருப்பினும் பொலிஸார் சுற்றி வர நின்று துப்பாக்கியால் சுட சின்னட்டி வீரசிங்கம் கைது செய்து கொண்டு செல்லப்பட்டார். இவரை மட்டுமல்ல இதனுடன் தொடர்புபட்ட அனைவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பின்னர் வசதிவாய்ப்பில் பலமானவர்களாக (கார்கள், துப்பாக்கிகள் என) கோவியர்கள் காணப்பட்டதால் எங்கள் ஊரை முற்றுகையிட்டு சுற்றி வளைத்தனர். எங்களுடைய சமூகத்தவர்கள் கூலி வேலை செய்வதால் அவ்வாறு பலமற்றவளாகக் காணப்பட்டனர். எந்த வசதியும் இருக்கவில்லை. சுற்றி வளைத்ததால் எங்கும் நகர முடியவில்லை.

பிள்ளையார் கோயில் கரைப்பகுதிகளில் இருந்த வீடுகள் எல்லாவற்றையும் கொழுத்தி அட்டகாசம் செய்தனர். மற்றைய பகுதிகளும் கொழுத்தப்பட்டன. பல இளைஞர்கள் இதனை இணைந்து செய்தார்கள். இன்று நடைபெற்ற யுத்தத்தை விட அது மிகக் கொடுமையானது. ஒரு கிராமத்தையே அவர்கள் ஆக்கிரமித்தார்கள். பிரான்பத்தையில் பேரம்பலம் என்ற ஒருவர் இருந்தார். அவர் வன்னியில் விவசாயம் செய்தவர். அவரிடம் உரிமைத்துவம் பெற்ற துவக்கு ஒன்றை வைத்திருந்தார். எங்களூரில் இருந்த சின்னத்தம்பி என்பர் இவருடன் இணைந்து வேட்டைக் குச் செல்வதால் அத்துப்பாக்கியை இரவலாக பெற்றிருந் தார். இத்துப்பாக்கியைப் பயன்படுத்தி பிள்ளையார் கோயில் இருந்து வெடி வைக்க தொடங்கினார். எதிர்த் தாக்குதல் நடத்தப்படுவதைக் கண்டு பயந்து அதன் பின்னரே அவர்களது தாக்குதல்கள் நிறுத்தப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தினை எங்களுடைய சமூகம் பயன்படுத்தாவிடின் பல பேர் அன்று அழிக்கப் பட்டிருப்பார்கள்.

அதற்குப் பின்னர் வெளிப்போக்குவரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல முடியாதநிலை இருந்தது. வெளியில் செல்பவர்களை வாள்களால் வெட்டினார்கள், அடித்தார்கள். ஜெகநாதன் மாஸ்ரரின் தமையனாரை அவருடைய தகப்பன் கிழங்கு பிடுங்கி பண்டத்தரிப்பில் விற்று வரும்படி அவரிடம் கொடுத்திருந்தார். கோவியர்கள் தனக்கு பழக்கம் என அவருடைய தந்தை சொன்னதால் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் சென்றாலும் பலத்த அடி காயங்களுடனேயே வீடு திரும்பினார்.

அதே போல என்னுடைய மனைவியின் தகப்பன் சிங்கப்பூரில் இருந்தார். அவர் அனுப்பிய பணத்தைப் வங்கியில் பெற்றுக் கொள்வதற்காக பெரியதகப்பனின் மகனுடன் என் மனைவி சென்றார். இதற்காக சித்தங் கேணியார்களின் காரைப் பிடித்து சென்றார். காரில் சென்று ஊர் எல்லைக்கு அருகில் வந்த நேரத்தில் சங்கரப்பிள்ளையின் மகனும் அவருடைய சகோதரனும் காரை மறித்து காரை ஓட்டியவரை வெட்டியிருந்தனர். அதன் பிறகு குணம் என்பவர் சீவல் தொழில் செய்பவர். அவர் பண்டத்தரிப்பில் சீவல் தொழில் செய்வதற்காக சென்றபோது அவரது கையை வெட்டியிருந்தனர். அவர் அண்மையிலேயே இறந்தார். இவ்வாறு அவர்களின் நடவடிக்கை மோசமாக இருந்தது.

அவசர தேவைக்கு செல்ல வேண்டும் எனில் சித்தங் கேணியில் உள்ள எங்களுடைய சமூகத்தவர் கார் வைத்திருந்தார்கள். அவர்களைப் பிடித்து செல்ல வேண்டும் எனில் இரவிலே புறப்பட்டு செல்ல வேண்டி இருந்தது. ஆனால் சித்தங்கேணியைச் சேர்ந்த தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூட எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து மக்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால் இன்று அவர்கள் துணிந்து கதைப்பதற்கு எமது கிராம மக்களின் செயற்பாடுகளே காரணம் எனலாம். தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டம் இதன் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான தேவைகளை இலங்கை இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆரம்பித்தன. இதற்கான ஒத்துழைப்பை அவர்களே வழங்கினார்கள். இவர்களூடாகவே தெற்கிலுள்ள இடதுசாரிக்கட்சிகள் மற்றும் பிக்குகள் கிட்டத்தட்ட 150 பேர் உட்பட சமாதான சேவைக்கு இங்கு வந்தார்கள்.

1968ம் ஆண்டு இச் சண்டை உச்சம் பெற்று சின்னர் கார்த்திகேசு, வன்னியன் குமரேசு இறந்தார்கள். அவர்களின் தரப்பில் தம்பியையா மற்றும் இன்னொருவர் என இரண்டு இரண்டு பேர் இருதரப்பிலும் இறந்தார்கள். அவர்கள் பகல் வேளைகளில் தாக்குதல் நடத்த எங்களுடைய சமூகத்தவர் இரவு வேளைகளில் தாக்குதல் நடத்தினர்.

எங்களுடைய ஊரில் கந்தசாமி என்ற ஒருவர் இருந்தார் இவர் CID என்றால் அன்று யாருக்கும் தெரியாது. இன்றும் எல்லோராலும் அறியப் பட்டவர். அவர் CID போலவே செயற்பட்டார். இன்று அவர் இறந்துவிட்டார். பெறப்படவேண்டிய தகவல்களை நுட்பமாகப் பெற்று தனியவே பல செயற்பாடுகளைச் செய்த போதும், எந்த விடயத்திலும் இவர் பிடிபடவில்லை. இவர் செம்பன் என்பவரை சுட்டிருந்தார். 1967 பொங்கல் காலகட்டம் என்பதால் அப்பொங் கலை கிராமத்தில் ஒரு வீட்டாரும் பொங்கவில்லை. வெடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்தினால் பிரச்சினை ஏற்படலாம் என்ற காரணத்தினால் ஒருவரும் பொங்கல் பொங்கவில்லை. அந்த காலத்தில் சீதகுடும்பம் என்று கூறப்படுகின்ற ஐயாத்துரை மாஸ்ரரின் வளவில் பொலிஸ் நிலையம் ஒன்றும் காணப்பட்டது. ஐயாத்துரை மாஸ்ரர் பாடசாலை விடயங்களில் கடுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்.

எங்களுக்காக பெருஞ்சாதிகள் பல ஒத்துழைப்பையும் கொடுத்திருக்கிறார்கள். சமூக நீதிக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள்.

கோவியர்களில் மான் முத்தையா என்பவர் இலங்கை கொமினிஸ்ட் கட்சியில் செயலாளராக இருந்தவர். அவர் ஊடாகவே எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வு கண்டோம். இருப்பினும் எங்களுடைய மக்கள் அவருடைய வீட்டை அடித்து உடைத்தார்கள். பின்னர் இவர் கொழும்பிற்கு சென்றார். தற்போது மகனொருவர் இவ்வீட்டில் வசிக்கிறார். அவர் நியாய பூர்வமாக எங்களுக்காக உதவி செய்தார்.

சங்கானையில் வைரமுத்து என்பவர் UC இல் சேமனாக இருந்த காலத்தில் இக்கிராமத்திற்கான அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது. இவர் வந்த பின்னரே அபிவிருத்தி என்பது இக்கிராமத்திற்காக முன்னெடுக்கபட்டது. சேமனில் அங்கத்தவராக இருந்த நாகலிங்கம் என்பவர் மூலம் இச் சமூகத்திற்கான சின்ன சின்னத் தேவை ஒழுங்கு செய்யப்பட்டது.

**1956**ம் ஆண்டு எங்களுடைய கிராமத்திற்கான பாடசாலை அமைக்கப்பட்டது. ஐயாத்துரை மாஸ்ரர் என்ற வெள்ளாளர் இப்பாடசாலை அமைப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானவராவார். விதானையார் செவ்வந்தி நாதரும் இதில் முக்கியமானவர். இவரும் வெள்ளாள சமூகத்தைச் சேர்ந்தவர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாடசாலைகளில் அனுமதி கிடைக்காதனாலேயே எங்களுடைய சமூகத்திற்கென ஒரு பாடசாலை அமைக்கப்பட்டது. ஒரு காலத்தில் அவர்களுடைய பாடசாலைகளாக சித்தங்கேணி கணேச வித்தியா சாலை, சிவப்பிரகாச வித்தியாசாலை என்பன காணப் பட்டது. பிற்காலத்தில் இது மாற்றப்பட்டுள்ளது. நான் சிவப்பிரகாச வித்தியாலையில் கல்வி கற்றேன். சட்டம்பி விதானையார் ஒரு கோவிய சமூகத்தைச் சேர்ந்தவர். அவரும் ஒரு மாஸ்ரர். அன்று ஒடுக்கப்பட்ட நிலையைப் பார்த்த பெரியவர்கள் எங்களுடைய சமூகம் பின்னோக்கிச் செல்லபோகிறது என்பதை உணர்ந்து கல்விக்கான தேவையை பூர்த்தி செய்ய ஒரு பாட சாலையை உருவாக்கினார்கள். செவ்வந்திநாதர் இன்று இறந்தாலும் ஒரு நல்ல சேவையை செய்திருந்தார். இன்று அவர் மூலமாகவே இச் சமூகம் கல்வி அறிவைப் பெற்றிருக்கிறது.

1956இல் எம் சமூகத்திற்கு தேவையான வாசிகசாலை உருவாக்கப்பட்டது. இதுவும் ஒரு கல்வி நிலையமே. பாடசாலையில் ஆசிரியர் கற்பித்தல் என்றால் இவ் வாசிகசாலையில் நாங்களாகவே கற்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

வாசிகசாலைக்கு சரஸ்வதி சமூக நிலையம் எனப் பெயரிடப்பட்டது. ஆனால் இன்றைய தலைமுறை சமூகத்திற்கான தேவை என்ன என்பதை உணராது அரசியல் கட்சிகளுடன் இணைந்து சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சரவுகளையே ஏற்படுத்துகிறார்கள். சமூகத்தினை எவ்வாறு கட்டிக் காக்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற சிந்தனை அன்று எம் மூதாதையர்களுக்கு இருந்தது போல இன்று இன்றைய மக்களுக்கு இல்லை.

அரசியல் கட்சிகளுடன் இணைந்திருப்பவர்கள் அரசியல்வாதிகளின் துணையில்லாமையே சமூகத் திற்கான தேவைகளை நிறைவு செய்ய முடியும். ஆனால் அவ்வாறில்லாது அரசியல் கட்சிகளுக்கு வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களைப் பலப்படுத்து கிறார்களே தவிர சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்வதில்லை. எங்களுடைய உரிமைகளுக்காகவே இலங்கை அரசுடன் போரிட்டோம்.

**பரணீ:**

**நிச்சாமத்தில் இடம்பெற்ற பெரிய பிரச்சினை என்றால் அது கோவியர்களுக்கும் உங்களுக்குமான பிரச்சினை. அப் பிரச்சினை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது?**

**வெற்றியன் இராசரத்தினம்:**

ஆம். இப்பிரச்சினை தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகள் தான் தீர்த்து வைத்தனர். மான்முத்தையா செயலாளராக செயற்பட்டார். இவரும் பிக்குமார்கள் கிட்டத்தட்ட 150 பேர் இங்கு வந்திருந்தார்கள். அதன் பின்னர் எங்களுடைய மக்கள் வீட்டுக்கு ஒவ்வொருவர் ஆயுதங்களை வாங்கி வைத்திருந்தார்கள். ஏனெனில் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டிருந்தது. இச் சண்டைகள் முடிவடைய முன்னர் மட்டுவிலில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. மட்டுவிலில் உரிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டபோது பொங்கல் பானைகள் அடித்து உடைத்து கலகம் நடத்தப்பட்டது.

சாவகச்சேரியிலும் மாவிட்டபுரத்திலும் சண்டைகள் நடத்தப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் என்பவருடைய கோயிலாகும். இவரால் தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் அனுமதிப்பது மறுக்கப்பட்டது. மாவிட்டபுரம் தேர் கொழுத்தப்பட்டது. அக்காலத்தில் முழுச் சமூகமும் ஒன்றிணைந்தே போராட்டம் நடத்தியது.

மட்டுவில், கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, பாசையூர், யாழ்ப்பாணம், கரவூர் என தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்தி, தீர்வுகள் பெறப்பட்டது.

தாழ்த்தப்பட்டவர்கள் சலூன்களில் தலைமயிர் வெட்ட முடியாது. சங்கானையில் மணியம் என்பவர் எங்களுடைய சமூகத்திற்காக சலூனைத் திறந்தார். ஏனைய இடத்தில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு சலூனில் இடமில்லை. நாங்கள் வெட்டினால் உயர்சாதியினர் அங்கு சென்று தலைமயிர் வெட்டமாட்டார்கள் என்பதால் எங்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது. பள்ளர் நளவர், பறையர், அம்பட்டர், வண்ணார் என முழுச் சமூகமும் இணைந்து போராட்டத்திற்கான தீர்வைக் கொண்டு வந்தது. ஆனால் மழை விட்டாலும் தூவானம் போகவில்லை என்பது போல சில சில இடங்களில் இப் பிரச்சினை காணப்படுகின்றது. அதற்காக நாங்கள் ஒடுங்கி வாழாது துணிந்து வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பரணீ:
தற்பொழுது சங்கானை கோயில் எவ்வாறுள்ளது?
இப்பொழுது சுவாமி எல்லோரும் காவ முடியுமா?
தொண்டர் சபை இருக்கின்றதா?
உங்களுடைய பிரசாதங்களைச் சாப்பிடுவார்களா?

வெற்றியன் இராசரத்தினம்:
தற்பொழுது பிரச்சினை இல்லை. எல்லோரும் சுவாமியை காவ முடியும். தொண்டர்கள் இருக்கிறார்கள். உள்வீதியில் தொண்டர்களே காவுவார்களே தவிர வேறு எச் சாதியினரும் காவ மாட்டார்கள். சென்ற முறை ஒரு பிரச்சினை ஏற்பட்டதன் பின்னர் விளையாட்டுக்கழகங்கள் இணைந்து அன்னதான சபையை உருவாக்கியது. விளையாட்டுக்கழகம் 11வது திருவிழாவான பூங்காவனத்தை செய்திருந்தது. இளைஞர்களின் செலவிலேயே அன்னதானம் இடம் பெற்றிருந்தது. சங்கானைப் பிள்ளையாரில் தேர் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று திருப்பணிச் சபை உருவாக்கினார்கள். பத்து திருவிழாக்காரரிலும் இரண்டு பேர் என்ற அடிப்படையில் திருப்பணிச்சபையை தெரிவு செய்தார்கள். இதற்கான நிதி திரட்டி தேர் செய்திருந்தார்கள். தேரோட்ட விழாவில் அன்னதானம் வைக்க வேண்டும் என்பதற்காக அதிலும் கோவியர்களில் பாலு என்பவர் அன்னதானச் சபையை தன்னுடைய கைக்குள் வைத்திருக்க முனைந்தார். உயர் வர்க்கத்தைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாளர், மற்றைய சமூகத்தவரை மதிப்பவர்கள் சமைத்து கொடுத்தால் எல்லாரும் சாப்பிடுவார்கள். அது நியாயமானது. "கோவியர்கள் ஒரு புறஞ்சாதி, சவம் காவுபவர்கள். அவர்கள் சமைத்து நாங்கள் சாப்பிடுவதா?" என்று பிரச்சினை எழுப்பப்பட்டது.

கோவியர்களிடம் "இந்து இளைஞர் மன்றம்" என்ற ஒன்று காணப்பட்டது. எங்களிடம் "ஞான வைரவர் விளையாட்டுக் கழகம்" என்ற அமைப்பு இருந்தது. இரு பகுதியினரும் தண்ணீர்ப்பந்தல் போடுவார்கள். பின்னர் அடுத்த வருட தேர்த் திருவிழாவில் தங்களுடைய விளையாட்டுக் கழகத்தால் அன்னதானம் செய்யப் போகிறோம் என சிவதட்சணா மூர்த்தியிடம் கதைத்த போது அதற்கும் அவரும் அனுமதித்திருந்தார்.

எங்களுடைய சமூகத்திற்கு என திருவிழா இருக்கும் அதேநேரம் அவர்களுடைய சமூகத்திற்கு என்று இல்லாது தனிக் குடும்பத்திற்கென்றே பூசை இருந்தது. பூசைக்காரரர் சுவிசில் இருந்து வந்து அன்ன தானம் மடம் கட்டி கோயிலுக்கு கொடுத்தார். கோவியர்களின் தரப்பிலிருந்து "ஏன் நிச்சாமத்து பள்ளருக்கு அன்னதானப் பொறுப்பு கொடுக்கப் பட்டது?" என பிரச்சினை எழுந்தது. நாங்கள் விதானை யாரின் தம்பியார் மனைவியுடன் கதைத்தே தேர்த்திரு விழாவில் அன்னதானம் வைப்பது தீர்மானிக்கப் பட்டது. கோவியர்கள் "ஏன் எங்களுக்கு அன்னதான உரிமை வழங்கப்பட்டது, தாங்களும் எங்களுடன் இணைந்து செய்தால் என்ன என" கோயிலுக்கு பொறுப்பாக இருந்தவரிடம் பிரச்சினை எடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அன்னதானத்தை இணைந்து செய்வதற்கு எங்களுடைய சமூகமும் இணங்கியதைத் தொடர்ந்து நாங்கள் அன்னதானத்திற்கான பொருட்களை வாங்கி கொடுத்திருந்தோம்.

பின்னர் கோவிய சமூகத்தினர் எங்களை அன்னதான மடத்திற்கு வர வேண்டாம் என்றும், தாங்களே சமைப்பதாகவும் கூறினார்கள். அதற்கும் எங்களுடைய இளைஞர்கள் அனுமதித்தனர் பின்னர் எங்களுடைய சமூகத்தவர் அன்னதானத்தினைப் பரிமாறச் சென்ற போது அதற்கும் வரவேண்டாம் எனத் தடுத்திருந்தார்கள்.

எங்களுடைய சமூகத்தவர் அன்னதானம் வைத்தால் கோவியப் பெண்கள் தாங்கள் சாப்பிட வில்லை எனச் சென்றுவிட்டனர்.

இதன் பின்னர் சென்ற வருடத்திற்கு முதல் வருடம் அன்னதான மண்டபம் கட்டியவரின் தம்பி சீலன் நேர்த்திக்கடன் ஒன்றிற்காக திருவிழாவின் முழு நாளும் அன்னதானம் கொடுக்கப்போகின்றோம் என கோயிலுக்கு பொறுப்பானவரிடம் கேட்டார்கள். இந்த விடயம் லண்டனில் உள்ள விதானையாரின் தம்பி மனைவி வரை சென்று அவரும் அதற்கு அனுமதித் திருந்தார். இவ்வாறு அவ்வருடத் திருவிழாவும் அன்ன தானமும் முடிவடைந்தது. மறு வருடமும். இதே கதையைச் சொல்லியிருந்தார்கள். அன்னதானத்திற் கான பொருட்களை கோவிய சமூகம் மண்டபத்திற்கு கொண்டுவர எங்களுடைய சமூகத்தவரும் அன்னதானத் திற்கான பொருட்களைப் கொண்டு சென்றது.

இதனைக் கண்ட கோவியர்கள் தங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை மண்டபத்திலிருந்து ஏற்றிச் சென்று விட்டனர். பின்பு கோயில் உரிமையாளரிடம் பிரச்சினை ஏற்படுத்தினர். அதற்கு கோயில் உரிமை யாளர் "எதற்காக கொண்டு வந்த பொருட்களை மீண்டும் ஏற்றிச் சென்றீர்கள்" என்று கேட்டார். பின்னர் விதானையாரின் தம்பி மனைவியின் அனுமதிப்படி விளையாட்டுக்கழகத்தினரையே அன்னதானத்திற்கு அனுமதித்தனர்.

நேர்த்திக்கடன் என்று சொல்லி சீலனின் தம்பியார் மீண்டும் அன்னதானம் கொடுப்பது பற்றி கதைத்திருக்கிறார்கள். இப் பிரச்சினை விதானையாரின் தம்பி மனைவி வரை சென்றிருந்தது. இவர் கோயில முதலாளியிடம் இவர்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுக்கும்படி கூறியிருக்கின்றார். இக்கோயில் நிர்வாகி "இப்பிரச்சினை தொடர்பாக கோவிய சமூகத்தினர் வருவார்கள். இதனை கதைத்து முடிவெடுக்கும்படி" விளையாட்டுக்கழகத்தினருக்கு தகவல் அனுப்பினர். கோயில் அன்னதானம் சார்ந்த விடயம் என்பதால் எங்களையே ஏதாவது முடிவு எடுக்கும் படியும் கோயில் நிர்வாகி கூறியிருந்தார். எங்களுடைய அன்றைய நிர்வாகத்தினர் அதனைப் பெரிதாக பொருட் படுத்தவில்லை. இவர்களுக்கு இன்று வரை உரிமை என்ற பிரச்சினை இல்லை. இன்றைய அரசியலும் இவ் வாறே நடைபெறுகின்றது.

இன்றுள்ள இளைஞர்களிடம் ஒரு சமூகத்தில் என்ன என்ன விடயங்கள் மறுக்கப்படுகிறது, எவ்வாறு வாழ்கின்றோம், என்ன என்ன அநீதிகள் எங்களுக்கு இழைக்கப்படுகிறது போன்றவற்றை எவரும் சிந்திப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. பல இளைஞர்கள் மத்தியில் எவ்விதமான நல்ல நோக்கமும் இல்லை. மோட்டார் சைக்கிளும், தொலைபேசியுமே அவர்களது நோக்கமாகும்.

**பரணீ:**
**1986ம் ஆண்டுக்கு பின்னர் வேறேதும் பிரச்சினை ஏற்படவில்லையா?**

**வெற்றியன் இராசரத்தினம்:**
நடைபெற்றது. மேற்குறிப்பிட்ட அன்னதானப் பிரச்சினை இடம் பெற்றது. நானும் தேர்த்திருவிழாவுக்கு சென்றிருந்தேன்.

கோவிய சமூகத்தவர் எங்களுடைய ஞான வைரவர் விளையாட்டுக் கழகத்தினை விலக்கி வைத்துவிட்டு அம்பாள் சனசமூக நிலையம், தொட்டிலடி சன சமூக நிலையம் என வேறு சில சனசமூக நிலையங்களை உள்நிறுத்தி திருப்பணிச்சபையை உருவாக்கியிருந்தார்கள்.

எங்களை அன்னதானத்திலிருந்து விலத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்திருந்தார்கள். தேரிற்கு மறுநாள் எங்களுடைய சமூகத்து இளைஞர்கள் கத்தி, பொல்லுகளுடன் போய் அவர்களிடம் பிரச்சினை ஏற்படுத்தினார்கள்.

இப்பிரச்சினை தொடர்பாக தேர்த்திருவிழாவிற்கு பத்து நாட்களுக்கு முன்பே கலந்தாலோசிக்கும்படி கோயில் நிர்வாகி கூறியும், எங்களுடைய கிராமத்தில் அமைக்கப்பட்ட நிர்வாகத்தினர் அதனை பொருட்படுத்தவில்லை. இதில் எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலே தவறு காணப்படுகிறது. எல்லா நேரத்திலும் அவர்களை குற்றம் சொல்லக் கூடாது. என்னுடைய பிள்ளைகளும் இந்த அடிதடிப் பிரச்சினைக்காக சென்றிருந்தார்கள். 2019இல் இப்பிரச்சினை ஏற்பட்டிருந்தது. "இப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தருபவரிடம் கதைப்பதைத் தவிர அடிபாடு சண்டைகளுக்கு போய் இறுதியாக பொலிஸிடம் அகப்பட்டு சிறையில் அடைபடும் நிலை தான் ஏற்படும்" என என்னுடைய இரண்டாவது மகனுக்கு கூறினேன். என்னுடைய பிள்ளைகள் இதில் நிற்பதால் பொலிஸ் பிரச்சினை ஏற்பட்டால் அவர்களுடைய வாழ்க்கையே பாழாகிவிடும் என்ற எண்ணம் என்னை உறுத்திக் கொண்டிருந்தது.

பின்னர் கோயிலடி நிர்வாகத்திற்கு சென்றேன். சிவதட்சணாமூர்த்தி வரும் வரை பொறுத்திருந்தேன். அவர் வந்தவுடன் என்னுடன் முன்பே பழக்கம் என்பதால் அவரிடம் இது தொடர்பாக கதைத்திருந்தேன். அவர் கோவிய சமூகத்தவர் செய்த பிழையை ஒத்துக் கொண்டதோடு எங்களின் பக்கம் இருந்த பிழையையும் சுட்டிக் காட்டினார்.

பின்னர் நிர்வாகத் தலைவராக இருந்த எங்களுடைய சமூகத்து இளைஞனுடன் இது தொடர்பாக கதைத்தேன். "கோவிய சமூகத்தவருடன் இப்பிரச்சினைக்காக சண்டைக்குச் செல்லும் போது ஏற்படுகின்ற விபரீதங்களில் பலர் சிறை செல்ல நேரிடும். இதற்கு மேலதிகமாக பல பொய் வழக்குகளும் போடப்பட்டு வாழ்க்கையும் பாழாக்கப்படும். இவ் வாறு வாழ்க்கையையே அழித்தவர்கள் எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்” என்று விளங்கப்படுத்தினேன். நான் குறிப்பிட்டதை அவ் இளைஞனும் ஏற்றுக் கொண்டார். பின்னர் பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொலிஸிற்கு அறிவித்ததால் பொலிசும் வந்திருந்தது. எங்களுடைய கிராமத்துக்கு பொறுப்பான இளவாலைப் பொலிஸிற்கு அறிவிக்காது யாழ்ப்பாணத்திற்கு அறிவித்தமையால் பொலிஸிற்கு அறிவித்தவரும் விசாரிக்கப்பட்டார். இப்பிரச்சினைக்கு காரணமான சீலன் என்பவர் விசாரிக்கப்பட்டார். சிவதட்சணாமூர்த்திக்கு சிங்களம் கதைக்க தெரிந்ததால் அவர் பிரச்சினையை பொலிஸிற்கு தெரிவித்தார். அவர் எங்கள் பக்கத்திலுள்ள நியாயத்தையும் குறிப்பிட்டார்.

**பரணீ:**

**சாதிப்பிரச்சினையில் இயக்கத்தின் ஒத்துழைப்பு எவ்வாறாக இருந்தது?**

**வெற்றியன் இராசரத்தினம்:**

இப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இயக்கம் இருக்கவில்லை.

**பரணீ:**

**இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இப்பிரச்சினை எவ்வாறு இருந்தது?**

**வெற்றியன் இராசரத்தினம்:**

1970 உடன் எங்களுடைய பிரச்சினைக்கு முடிவடைந்தது. தென்னிலங்கை அரசியல் கட்சிகள், கொமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனிஸ்ட் கட்சிகள், இடதுசாரிக்கட்சிகள் சமத்துவத்தை ஏற்படுத்தினார்கள்.

அங்குள்ள மதத்தலைவர்கள் சிங்களம் கற்பிப்பதற்காக இங்கிருந்த இளைஞர்களை கூட்டிச் சென்றார்கள். அதன் பின்னர் எந்த அரசியல் கட்சிக்காரர்களுக்கு ஆதரவளிக்கக் கூடாது என்ற ஒரு கட்டுப்பாடு இவ் ஊருக்கு இருந்தது.

இன்று இந்நிலை மாற்றப்பட்டு அரசியல்வாதிகளை கொண்டாடுகிறார்கள். இடதுசாரிகள் வந்த போது இவ் ஊரைப்பற்றிய பெருமையான பாடல்கள் சிலவற்றையும் பாடினார்கள். சமத்துவநிலை நிச்சாமம் கிராமத்திலிருந்து வந்தது என்பதற்காக அப் பாடல்களைப் பாடினார்கள்.

பரணீ:

அந்தப்பாட்டு உங்களுக்கு ஞாபகமிருக்கின்றதா?

வெற்றியன் இராசரத்தினம்:

ஆம் 3, 4 பாட்டுக்களை பாடினார்கள்.

"சங்கானைக்கு என் வணக்கம்
சரித்திரத்தில் உன்நாமம்
மங்காது யாழகத்தில்
மண்ணில் பிரகாரம்
எச்சாமம் சென்று
எதிரி நுழைஞ்சாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து இணைகிறார்கள்
சங்கையிலே என் யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை அந்த
மற்ற வியட்நாமில் குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் தீபத்தை
மெச்சுகின்றேன் சங்கானை. ”

வியட்நாம் என்று கூறப்பட்ட வசனம் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பயன் படுத்தியதாகும். அதாவது பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்தபோது அங்கிருந்த அமைச்சர் ஒருவர் வட்டுக்கோட்டை தொகுதியில் இரண்டு சமூக அமைப் பினரிடையே சண்டை இடம்பெறுகின்றது அதனைப் பற்றி ஒன்றுமே கதைக்கவில்லையே என்று கேட்கப் பட்டதாம். அதற்கு அமிர்தலிங்கம் அதுவொரு குட்டி வியட்நாம் யுத்தம் நடைபெறுகின்றது அதனைப் பற்றி கதைக்கத் தேவையில்லை என்று சொன்னார் என்று அறியப்படுகின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதி அமிர்தலிங்கமே இவ்வசனத்தை பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதால் சிங்கள ஊடகம் ஊடாக அது வெளியாகி பின்னர் இலங்கை கொமியூனிஸ்ட் கட்சியின் பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் இதனை இணைத்து பாடலை உருவாக்கியது. இதனைப் பாடியவர் தோழர் சுபத்திரன். இதுமட்டுமல்லாது வேறு பல பாடல்களும் பாடப் பட்டது. அதன் பின்னரே விடுதலைப் புலிகள் இயக்கம் அவர்களை புதுவை இரத்தினதுரை போன்ற கலை இலக்கியப் பேரவையில் அங்கத்துவம் வகித்தோரை தங்களுடைய செயற்பாட்டில் இணைத்துக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

உங்களுடைய சமூகத்தின் கல்வி வளர்ச்சி எவ்வாறு அமைந்தது?

வெற்றியன் இராசரத்தினம்:

பாடசாலையை உருவாக்கியமையால் வைத்தியர், பொறியியலாளர் உருவாகக் காரணமாக அமைந்தது. அதிலும் பொதுவாக ஆசிரியர்கள் பலர் உருவாக்கப் பட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள் பலர் உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

இக்கிராமத்தில் முதல் B.A பட்டத்தினை தில்லைநாதன் என்பவர் பெற்றுக் கொண்டார். முதல் பட்டதாரியாக இருந்தாலும் இச்சமூகத்திற்கு எவ்வித மான சேவையையும் செய்யவில்லை.

இக்கிராமத்தில் கிட்டத்தட்ட 400 குடும்பங்கள் காணப்படுகின்றன.

இக் கிராமத்தில் நாகராசா கபிலன் என்பவர் மட்டுமே பொறியிலாளருக்கான அனுமதி கிடைத்து படித்துக்கொண்டிருக்கின்றார்.

என்னுடைய மகன் தனிஸ்ரன் வைத்தியத் துறையில் பல்கலைக்கழகக்கல்வியை கொழும்பில் கற்றுக்கொண்டிருக்கின்றார்.

எங்களுடைய சாதியப்பிரச்சினை முழுவதும் அவருக்கு தெரியும். பத்து அல்லது பதினைந்து ஆசிரியர்கள் இக் கிராமத்தில் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

இன்று விக்கினேஸ்வரா பாடசாலையில் ஆசிரியர் நியமனங்கள் எவ்வாறு நடைபெறுகின்றது. அந்தந்த சாதியினரை நியமித்தல், உயர் சாதியினரை நியமித்தால் "ஏன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்ற மனநிலை" இவ்வாறான பிரச்சினை இருக்கின்றதா?

வெற்றியன் இராசரத்தினம்:

*அவ்வாறு பிரச்சினை இல்லை. ஆனால் நியமனம் சாதி அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. எங்களுடைய அரசியல் தலைவர்கள் சாதி அடிப்படையிலேயே சில விடயங்களைச் செய்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்கள் என்ற நிலையில் பொதுநோக்கில் செயற்படுவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் அரசியலில் மேல் நிலையில் இருந்தால் அவர்களுடைய சமூகத்திற்கு சேவை செய்ய அனுமதிக்காது வேறொரு இடத்தில் அவர்களை நியமிக்கிறார்கள்.*

*இதுவொரு பயங்கரமான அடக்குமுறையே. அரசியல் கட்சிக்காரர்களே எங்களுடைய சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதில்லை, சமூகத்தினை சீர்செய்வதில்லை, மதிப்பதில்லை என்றால் எவ்வாறு சிங்களவர்கள் சமத்துவத்தினை வழங்குவார்கள்?*

பரணீ:

மாற்றுத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றனவா? அவ்வாறு இடம்பெற்றிருப்பின் இரண்டு பகுதியினரும் ஒற்றுமையாக இருக்கின்றார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியன் இராசரத்தினம்:

ஆம். பல திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றது. இரண்டு பகுதியினரும் ஒற்றுமையாகவும் இருக்கின்றார்கள், தனிமையாகவும் இருக்கின்றார்கள்.

திருமணம் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. இது இருவரின் மனம் தொடர்புபட்டது. திருமணம் செய்ததற்காக ஒதுக்கப்பட்டது என்பது எங்களுடைய சமூகத்தில் இல்லை.

பெண்ணின் பெற்றோர்கள் அல்லது ஆணின் பெற்றோர்கள் ஒதுக்கியிருந்தாலும் சமூகத்தினால் ஒதுக்கப்பட்டது என்பது கிடையாது. என்னுடைய மச்சான் கூட கொய்யாத்தோட்டத்தில் ஒரு வெள்ளாளர் சமூகத்தினைச் சேர்ந்த பெண்ணையே திருமணம் செய்தார்.

ஜேர்மனிலேயே திருமணம் செய்திருந்தார். பொருளாதார நிலையில் கஷ்ரம் வருகின்றபோதே பிரச்சினை அதிகரிக்கும். பொருளாதார நிலையில் உயர் நிலையில் இருந்தால் சாதி தெரியாது.

பரணீ:

சாதி ரீதியாக உடை அணியும் முறை எவ்வாறு இருக்கிறது?

வெற்றியன் இராசரத்தினம்:

இது ஆரம்பகாலங்களில் எங்களுடைய கிராமத்திலும் இருந்தது.

பெண்கள் குறுக்குக் கட்டாகத் தான் ஆடை அணிய வேண்டும். மேல் சட்டை போட முடியாது.

ஆண்கள் சேட் போட முடியாது. தோளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் துவாயை உயர்சாதியினர் வரும்போது எடுத்து கமக் கட்டில் வைக்க வேண்டும். அடக்குமுறையிலேயே வாழ்ந்தார்கள்.

பரணீ:
**இச் சாதிப்பிரச்சினையில் பொலிஸ் உங்களுக்கு எவ்வாறு ஆதரவளித்தார்கள்?**

வெற்றியன் இராசரத்தினம்:
எங்களுக்கு ஆதரவு என்று சொல்ல முடியாது. பெரும் பான்மை சமூகத்தவருக்கே அவர்கள் ஆதரவளித்தனர். எங்களுடைய சமூகத்தில் ஏதேனும் குற்றம் நடைபெற் றால் நேரடியாக பொலிஸ் இங்கே நேரடியாக வரு வார்கள், ஆனால் உயர்சாதியத்தவரின் கிராமங்களில் அவ்வாறு நடப்பதில்லை. அதற்கான பொருளாதார நிலை, வசதி வாய்ப்பினை அவர்கள் செய்து வைத் திருந்தார்கள். அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த போதே எங்களுடைய போராட்டம் வெற்றியடைந்தது.

பரணீ:
**இன்று சாதிமுறையின் வடிவங்கள் எவ்வாறு மாற்றமடைந் துள்ளது?**

வெற்றியன் இராசரத்தினம்:
சாதி வடிவங்கள் மாற்றமடையவில்லை. பொருளாதார நிலையில் ஒவ்வொருவரும் தாங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக உயர்சாதியினர் எம்மக்களை தன்வசமாக்கி வைத்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது எம்மவர்களில் விவசாய உற்பத்தி செய்பவர் கள் அதிகம் என்பதால் விவசாயப் பொருட்களை எம்மிடம் பெற்று பொருளாதார நிலையில் அவர்கள் முன்னிலையில் இருக்கிறார்கள்.

கோவியர்களிடம் நிறைய வாகனங்கள் இருப்பதால் எம் மக்களை பயன்படுத்தி இன்று அவர்கள் பொருளாதார நிலையில் முன்னணியில் இருக்கிறார்கள்.

ஆனால் இன்று இந்நிலை மாற்றமடைந்து, விவசாயப் பொருட்களை நேரடியாகவே கொழும்பு வரை கொண்டு சென்று இலாபத்தினைப் பெறும் நிலை எம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் வாகனங்கள் உயர்சாதியினருடையதாகவே உள்ளது.

1970ம் ஆண்டு கோவியருடன் இடம்பெற்ற சண்டைக்கு பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் எம் மக்களுக்கு கல் வீட்டில் வசிக்கும் நிலை ஏற்பட்டது.

சிறிலங்கா சுகந்திரக்கட்சி வந்தன் பின்னரே யாழ்ப்பாணம் விவசாயத்தில் முன்னேற்றமடைந்தது. அதன் பின்னரே காணி வாங்கும் வசதி ஏற்பட்டதுடன், கல்வீடு கட்டும் நிலையும் ஏற்பட்டது. 1970க்கு பின்னரான நிலையிலேயே முன்னேற்றகரமான நிலை எம் மக்களுக்கு ஏற்பட்டது.

சிறீமா வடபகுதிக்கு வந்த போது வடபகுதி மக்கள் மிளகாய், வெங்காயங்களால் மாலை போட்டு கௌரவித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

தங்கள் கிராமத்தில் சாதிப் போராட்டத்தால் இறந்தவர்கள் யார்?

வெற்றியன் இராசரத்தினம்:

*வன்னியன் குமரேசு,*

*சின்னர் கார்த்திகேசு*

*சாதியப் போராட்டத்தில் இறந்தார்கள்.*

*ஏனையவர்களும் சாதிப் போராட்டத்தில் ஈடுபட்டாலும் அவர்கள் அந்தக் காலப் பகுதியில் இறக்கவில்லை.*

*வேறு காரணங் களாலேயே இறந்தார்கள்.*

பரணீ:

சாதிப் போராட்டத்தால் இறந்தவர்களுக்காக ஏதாவது நிதி வழங்கப்பட்டதா?

வெற்றியன் இராசரத்தினம்:

*இல்லை.*

*அவர்களுக்காக எந்த நிதியும் வழங்கப்படவில்லை. அன்றைய காலகட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட நிதி ஒரு பிரச்சினையாக இருந்ததால் அவ்வாறு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை.*

பரணீ:

சாதிப்பிரச்சினையை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியன் இராசரத்தினம்:

*சாதிப்பிரச்சினையை ஒழிப்பதற்கு முதல் சக மனிதனை மதித்து வாழவேண்டும். மனித நேயத்தை மதித்து வாழ வேண்டும். நியாயபூர்வமாக சேவை செய்வதற்கும், படித்து சேவை செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது. காசை மட்டும் கொடுத்து விட்டு சேவை வழங்க முடியாது. இதில் சமூகத்திற்கான தேவை அங்கு தடைப் படுகின்றது.*

பரணீ:

நிச்சாமம் கிராமம் இன்று பொருளாதாரம், கல்வி, சமூக நிறுவனத்தில் எவ்வாறு உள்ளது?

வெற்றியன் இராசரத்தினம்:

*பொருளாதார நிலையில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் வசதியாக உள்ளது கல்வியில் நூற்றுக்கு நாற்பது வீதம் உயர் நிலையில் உள்ளது.*

*குறிப்பாக பொறியியலாளர் வைத்தியர் உருவாக்கப்பட்டுள்ளனர்.*

*இன்னும் வளர வேண்டிய தேவை மற்றும் கட்டாயங்கள் உள்ளது.*

*சமூக சேவைகளின் நிர்வாகம் மிகவும் பின்நோக்கிய நிலை யிலேயே உள்ளது.*

*காரணம் சமூக சேவைகளை சமூக நிறுவனங்கள் தங்களது கட்டமைப்பை உருவாக்கி மேற்கொள்ள வேண்டும்.*

*ஆனால் இன்று சுயலாபத்திற்காக செயற்படு கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது எமது மூதாதையர்கள் எமது சமூகம் நல்ல நிலையில் முன்னேற வேண்டும் என்ப தற்காகவே சனசமூக நிலையத்தை உருவாக்கினார்கள்.

ஆலயம், சரஸ்வதி சனசமூக நிலையம், பாடசாலை, கூட்டுறவுச் சங்கம் என்பன மக்களுக்கு தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. அந்தத் தேவைகளை இன்று உதா சீனம் செய்யும் வகையில் அந்த நிர்வாகத் தலைவர்கள் செயற்படுகிறார்கள்.

இது தவறான விடயம். அரசியல் தலைமைகள் என்பது எங்களுக்கு தேவையற்றது.

அரசியல் வாதிகள் தமது தேவைகள் நிறைவடைந்தவுடன் மக்களை தூக்கியெறிந்து விடுவார்கள்.

இருப்பினும் அரசியல் தலைவர்களைப் பின் பற்றுபவர்கள் தனக்கான தேவைகளை நிறைவேற்றுவ துடன், சமூகத்திற்கான தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

அரசியல் வாதிகளுக்குப் பின்னால் இருப்பதை விட சமூகத்திற்கு பின்னால் இருந்தால் எங்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படும் போது சமூகம் முகம் கொடுக்கும்.

ஆனால் அரசியல்வாதி அவ்வாறு அப் பிரச்சினைக்கு முகம் கொடுக்காது கைவிட்டுவிடுவார். நிர்வாகக் கட்டமைப்புடன் தொடர்புபடுபவர்கள் சமூக மாற்றங் களை ஏற்படுத்த வேண்டும்.

நிர்வாகக் கட்டமைப்புக்காக தெரிவு செய்யப்படுபவர்கள் விழாக்களை நடத்தும் போது தமக்கு அறியப்பட்ட ஒருவரை அழைத்து அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிப்பது மட்டுமல்லாது தங்களையும் கௌரவிக்கிறார்கள்.

சமூக விழாக்களுக்காக அழைக்கப்படுபவர்கள் சமூகத்திற்கு சேவை செய்பவர்களாக இருக்க வேண்டும். இவர்களை விருந்தினர்களாக அழைத்து பின்னர் தமது சுய தேவையை அவர்களிடம் நிறை வேற்றுவது என்பது மிகவும் பிற்போக்குத்தனமானது.

பரணீ:
சாதிவெறியுடன் இருப்பவர்களுக்கு நீங்கள் கூறும் கருத்து என்ன?

வெற்றியன் இராசரத்தினம்:
சாதிவெறியுடன் இருப்பவர்கள் அறிவீனம் உடையவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். இன்று சமூகம் பெருமளவில் மாற்றமடைந்துள்ளது. அவர்களுக்கு கல்வியறிவு, சமூகஅறிவு, உலக அறிவு என்பது இல்லாதவர்களே இன்றும் சாதிவெறி உடையவர்களாக இருப்பார்கள்.

ஆனால் உள்நோக்கம் என்பது எல்லோரிடத்திலும் காணப்படும். என்னை ஒரு சமூகத்தில் விருந்தினராக அழைத்தாலும் கூட மற்றவர்களிடம் "இவன் யார் தெரியுமா? நிச்சாமத்து பள்ளன்" எனச் சுட்டிக் காட்டுவார்கள்.

என்னால் அவருடைய தேவை நிறை வேற்றப்படவேண்டியிருக்கும் அதற்காகவே என்னை அழைத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் மனித நேயத்துடனே செயற்பட வேண்டும். அதுவே முக்கிய மானது. குடும்ப அங்கத்தவராக இருந்தாலும் யாராக இருந்தாலும் என்னை மதிப்பவர்களுக்கே மரியாதை கொடுக்க வேண்டும்.

உயர் பொருளாதார நிலைக்காக மதிப்பு கொடுக்க வேண்டும் என்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை மண்ணே உனக்கு வணக்கம்!

சுபத்திரன்

*சங்கானைக் கென் வணக்கம்!*
*சரித்திரத்தில் உன்நாமம்*
*மங்காது! யாழகத்து*
*மண்ணிற் பலகாலம்,*
*செங்குருதிக் கடல் குடித்துச்*
*செழித்த மதத்துக்குள்*
*வெங்கொடுமைச் சாக்காடாய்*
*விற்றிருந்த சாதியினைச்*
*சங்காரம் செய்யத்*
*தளைத்தெழுந்து நிற்கின்ற*
*சங்கானைக் கென் வணக்கம்!*

*கோயிலெனும் கோட்டைக்குள்*
*கொதிக்கும் கொடுமைகளை*
*நாயினிலும் மிக்க*
*நன்றிப் பெருக்கோடு*
*வாயிலிலே நின்று*
*வாழ்த்தும் பெருஞ்சாதி*
*நாய்கள்.... வாலை*
*நறுக்கி... எழுந்தாய்!*
*சங்கையிலே நீ யானை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை!! அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்!

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப் பெறிந்து நீறாக்கும்!
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுடுறேன்! சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே! உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் - சங்கானை
மண்ணும் மலர்ந்த
மற்ற வியட்நாமே!

எண்ணத்திற் கோடி
ஏற்றம் தருகின்றாய்!
புண்ணுற்ற நெஞ்சுள்
புதுமை நுழைக்கின்றாய்!
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்!
மண்ணின் வெறியை
மோதி எரிக்கின்ற
திண்மை எழுந்த
தீயாக நிற்கின்றாய்!
உன்னை, எனக்கு
உறவாக்கி விட்டவனை
என்னென்பேன்!
என்னென்பேன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பெருங் கண்டத்தும்
எழுந்துவரும் பூகம்பம்
தந்தவனாம் மாஓவின்
சிந்தனையால் உன் நாமம்
செகமெல்லாம் ஒலிக்கட்டும்!
செங்கொடியின் வீடே!
சிறுமை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேன் உனக்கு வணக்கம்!
சங்கானை மண்ணே,
உனக்கு வணக்கம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நிறுவனத்தின் ஆவணகம்

நூலக நிறுவனத்தின் பல்லூடக நூலகத்தில்
(www.noolaham.org,
www.noolaham.media)
வெற்றியன் இராசரத்தினம்
வாய்மொழி வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
பதிவு செய்தவர் : க.பரணீதரன்
காலம் : 2020
நேரம்: 1 மணி 40 நிமிடம் 36 செக்கன்
https://aavanaham.org/islandora/object/noolaham%3A32652



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளையார் கோயில் கரைப்பகுதிகளில் இருந்த வீடுகள் எல்லாவற்றையும் கொழுத்தி அட்டகாசம் செய்தனர். மற்றைய பகுதிகளும் கொழுத்தப்பட்டன. பல இளைஞர்கள் இதனை இணைந்து செய்தார்கள். இன்று நடைபெற்ற யுத்தத்தை விட அது மிகக் கொடுமையானது. ஒரு கிராமத்தையே அவர்கள் ஆக்கிரமித்தார்கள். பிரான்பத்தையில் பேரம்பலம் என்ற ஒருவர் இருந்தார். அவர் வன்னியில் விவசாயம் செய்தவர். அவரிடம் உரிமைத்துவம் பெற்ற துவக்கு ஒன்றை வைத்திருந்தார். எங்களூரில் இருந்த சின்னத்தம்பி என்பர் இவருடன் இணைந்து வேட்டைக்குச் செல்வதால் அத்துப்பாக்கியை இரவலாக பெற்றிருந்தார். இத்துப்பாக்கியைப் பயன்படுத்தி பிள்ளையார் கோயில் இருந்து வெடி வைக்க தொடங்கினார். எதிர்த் தாக்குதல் நடத்தப்படுவதைக் கண்டு பயந்து அதன் பின்னரே அவர்களது தாக்குதல்கள் நிறுத்தப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தினை எங்களுடைய சமூகம் பயன்படுத்தாவிடின் பல பேர் அன்று அழிக்கப் பட்டிருப்பார்கள்."

– வெற்றியன் இராசரத்தினம்

ISBN : 9786246601263
9 786246 601263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org